**சம்மாந்துறை பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சம்மாந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்மாந்துறை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,330,840 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நுகர்வு, மின்சார மற்றும் எழுதுகருவி பொருட்களின் கையிருப்பு ரூபா 838,224 தொகை மற்றும் விற்பனை நிலையத்தில் காணப்பட்ட ரூபா 408,500 பெறுமதியான கூட்டுப்பசளை இருப்புக்கள் என்பன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட கணினி, இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் உள்ளடங்கலாக 30 பொருட்களின் கிரயப் பெறுமதிகளினை சொத்துக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து நன்கொடையாக கிடைக்கப் பெற்றிருந்த தொலைக்காட்சிப் பெட்டியின் பெறுமதி ரூபா 282,659 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 07 விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் பேரேட்டின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 10,148,738 தொகையான வேறுபாடொன்று இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா14,974,592 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 23,642,420 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் பாதீடப்பட்ட வருமானங்கள் அறவிடுவதிலுள்ள வினைத்திறனின்மை மற்றும் செலவுகளின் சிக்கனமற்ற தன்மையின் காரணமாக மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானத்திலும் பார்க்க மீண்டுவரும் செலவீனம் ரூபா 14,924,592 தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. மேலும், குறித்த ஆண்டில் காசாக உழைக்கப்பட்ட வருமானத்தினை விட காசாக செலுத்தப்பட்ட செலவீனம் ரூபா 20,117,850 தொகையால் அதிகரித்துக் காணப்பட்டமையினால் இச் செலவீனத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு சபையானது கடந்த ஆண்டுகளில் சேமித்து வைத்திருந்த காசு கையிருப்பு மீதி ரூபா.20,358,700 தொகையினை பயன்படுத்தியிருந்தது. | கொவிட் - 19, பொருளாதார நெருக்கடி காரணமாக விலை ஏற்றத்தினால் ஏற்பட்ட மேலதிக செலவாகும். | பாதிடப்பட்ட வருமானங்களை அறவிடுவதில் வினைத்திறனையும் மற்றும் செலவுகளின் சிக்கனத் தன்மையினையும் கடைப்படித்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| (i) வீதவரியும் வரியும் | 7,348,748 | 32,474,661 | 9,041,949 | 23,432,712 | 10,610,000 | 26,253,226 | 3,253,226 | 22,883,530 |
| (ii) வாடகை | 32,408,746 | 39,182,350 | 31,536,857 | 7,645,492 | 32,067,746 | 35,894,941 | 25,540,605 | 10,354,335 |
| (iii) உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 3,080,000 | 1,941,350 | 1,941,350 | - | 2,050,000 | 1,750,350 | 1,750,350 | - |
| (iv) ஏனைய வருமானம் | 13,706,000 | 3,770,315 | 3,770,315 | - | 14,459,000 | 8,311,463 | 8,311,463 | - |
| (v) கூட்டுத் தொகை | 56,543,494 | 77,368,676 | 46,290,471 | 31,078,204 | 59,186,746 | 72,209,980 | 38,855,644 | 33,237,865 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீதவரி நிலுவை ரூபா 23,432,712 தொகையாக இருந்தது. | வீதிவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வருமானங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 2,840,896 தொகை இறைச்சிக்கடை வாடகை நிலுவையாக காணப்பட்டிருந்தது. மேலும், இத்தொகையினுள் 2017 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ரூபா 1,105,120 தொகை 12 வாடகைதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக மீதிகளினை இனங்கண்டு வாடகைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பொதுச் சந்தை குத்தகை ரூபா 3,518,430 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், இதில் ரூபா 1,017,080 தொகை 05 வருடங்களுக்கு மேலாக வாடகைதாரர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| **(இ)** | **முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா7,411,812 ஆகும். | இனி வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் - 19 மற்றும் மீளாய்வாண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணங்களினால் திறந்த பொதுச்சந்தை, இறைச்சிக்கடை மற்றும் கடை வாடகை நிலுவை வருமானத்தினை பதிவழிப்பதற்கு ஆளுனரிடமிருந்து ரூபா 9,100,054 தொகை மீளாய்வாண்டின் போது அனுமதி கிடைக்கப்பட்டிருந்தும், சபையினால் ரூபா 3,105,238 தொகை மாத்திரம் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான வாடகை நிலுவை ரூபா 5,994,816 தொகையினால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றில் இவ் விடயம் சீர் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் வியாபார உரிமைக்கட்டணம் அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்ட கடைகள் மற்றும் அறவிடப்பட்ட கடைகள் தொடர்பில் ஆராய்ந்து சபையின் அதிகார எல்லையினுள் காணப்படும் கடைகளின் உண்மையான எண்ணிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் அறவிடப்பட்ட வருமானத்திற்குமிடையே ரூபா 1,588,545 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன. | இவ் விடயம் இனி வரும் காலங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும். | சபையின் அதிகார எல்லையினுள் காணப்படும் கடைகளின் உண்மையான எண்ணிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரைக்கும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த அசைவற்ற ஆதன அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு சபையினால் ஆதன வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படாமல் அதற்கு குறைவான ஆதன அலகுகளின் மீதே வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் கடந்த ஐந்து வருடங்களில் ரூபா 10,582,996 தொகையான வருமான இழப்பு சபைக்கு ஏற்பட்டிருந்தன. | - மேற்படி - | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த அசைவற்ற ஆதன அலகுகளினை அடிப்படையாக கொண்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக்கழிவகற்றல் சேவைக்காக வருடமொன்றிற்கு சமுர்த்தி பெறும் குடும்பமொன்றிற்கு ரூபா 360 படி 1,889 | - மேற்படி - | வருடாந்தம் அறவிடப்படும் வருமானங்களின் மதிப்பீட்டுத் தொகைகளுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | குடும்பங்களுக்கும், சமுர்த்தியல்லாத ஏனைய குடும்பமொன்றிற்கு வருடமொன்றிற்கு ரூபா 600 படி 2,296 குடும்பங்களுக்கும் இரு வேறுபட்ட தொகைகளில் அறவிடப்படுகின்ற போதிலும், சபையின் வருடாந்தம் அறவிடப்படும் வருமானங்களின் மதிப்பீட்டுத் தொகைகளுக்கும் அறவீட்டுத் தொகைகளுக்குமிடையே ரூபா 1,451,552 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன. | | அறவீட்டுத் தொகைகளுக்கு மிடையே காணப்படும் வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 849 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், மற்றும் தார் வீதிகளினை மீள்சீரமைப்பதற்காக ரூபா 1,255,000 தொகை வைப்பாக அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் பயனாளிகளினால் மீள்சீரமைக்கப்பட்டு வைப்புத் தொகை மீளளிக்கவோ அல்லது அவ்நிதியை கொண்டு சபையினால் அவ் வீதிகளை மறுசீரமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளன. | வெட்டப்பட்ட கொங்கிரீட் மற்றும் தார் வீதிகளினை மீள்சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 52 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை உள்ளடக்கிய பதிவேடுகள் சபையினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களினை பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களினை பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 06 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிக விரைவாக உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சென்னல் கிராமம் - 1 அல் ஹம்றா - 07 ஆம் வீதி ரூபா 942,995 செலவில் புனரமைக்கப்பட்டிருந்த வீதியானது பள்ளம், கல் மற்றும் மணல் மேடுகளாக காணப்படும் அதேவேளை, வீதிகளுக்கிடையிலான ஏற்ற இறக்கங்களை சமப்படுத்தி வீதியின் இரு ஓரங்களிலும் கிறவலிட்டு மட்டப்படுத்தப்படாமையினால் இவ் வீதியினை பயன்படுத்தும் பாதைசாரிகளுக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. | நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் இவ் வீதி முழுமையாக புனரமைப்பு செய்யப்படும். | நிதியேற்பாட்டினை பெற்று மிக விரைவாக இவ் வீதியினை முழுமையாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளில் காணப்படும் பதவியணியினர்களுக்கு மேலதிகமாக தேவைப்படும் பதவியணியினர்கள் தொடர்பில் சபையினால் பதவியணி வெற்றிட எண்ணிக்கையில் மறுசீரமைப்பு மேற்கொண்டு போதியளவான ஊழியர்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைச் செயற்பாடுகளை மேற்கொள்ள வெற்றிடமாகவுள்ள பதவியணிகளுக்கு பதிலீட்டு ஊழியர்கள் 85 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு சபை நிதியிலிருந்து வருடாந்தம் சராசரியாக ரூபா 34,137,289 செலவிடப்பட்டு வருகின்றன. | எதிர்வரும் காலங்களில் இதனை நடைமுறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணி வெற்றிட எண்ணிக்கையில் மறுசீரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையில் கடன் பெற்று இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டில் 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டு மொத்தம் ரூபா186,601 தொகையான கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன் நிலுவைகளை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 26 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |